60/



# சேலம்

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

வரலாற்றில் சேலம்

ஆர். பூங்குன்றன், எம்.ஏ

அட்டைப்படம் :
அயோத்தியா பட்டணம், குதிரை மண்டபம்.

முதற் பதிப்பு 1979 - 2000 பிரதிகள்
தொ. பொ. ஆ. துறை. வெளியீடு எண். 60

துறை அச்சகத்தில் அச்சிடப்பெற்றது.

ஸ்ரீ ரங்கநாயகி.

திரு. மா. சந்திரசேகர்.

# வரலாற்றில் சேலம்

சேலம் மாவட்டம் பண்டைக் காலத்தில் கொங்கு நாட்டின் ஒரு பகுதியாக இருந்தது. கொல்லிமலை, நாமக்கல் வட்டம், திருச்செங்கோடு வட்டம், இராசிபுரம் வட்டம், சங்ககிரி வட்டம் ஆகிய பகுதிகள் மழ கொங்கம் என்று வழங்கப்பட்ட நாட்டில் அடங்கியிருந்தன. மேற்கில் மலையும் காவிரி ஆறும் எல்லை: கிழக்கில் கொல்லி மலை எல்லை: வடக்கில் சேர்வராயன் மலைகளும் கல்ராயன் மலைகளும் எல்லை: தெற்கில் காவிரி ஆறு எல்லை: இவ்வியற்கை அரண்களைப் பெற்றிருந்த இப்பகுதி பண்டை நாளில் தனி அலாதியான வரலாற்றினைப் பெற்றிருந்தது. மாற்றார் படையெடுப்பு மிகுதியும் இல்லை. அந்நிய படையெடுப்புக்கள் இப்பகுதிச் சமுதாய வாழ்வில் எந்த மாற்றத்தையும் உண்டுபண்ணி விடவில்லை. சிக்கலற்ற சலனமற்ற சமுதாய வாழ்க்கை, தொன்று தொட்டு வரும் பழக்க வழக்கங்களை சிக்கென பிடித்து வைத்திருக்கிறது. தமிழகத்தின் எல்லைக்கப்பால் சிறப்புற்ற

பல கோட்பாடுகள், பண்பாட்டுக் கூறுகள் இங்கு வாழ்ந்த மக்களின் மனக்கதவினைத் தட்டின என்பது உண்மையே. ஆனால் அவையெல்லாம் ஓர் அரசனுடைய வாள் முனையில் வந்தவை அல்ல. கலாச்சாரத் தூதுவர்கள் மூலம் நுழைந்தன. தமிழகத்தில் வடமேற்கு எல்லைக்கப்பாலிருந்து வந்த சமணம் கொங்கு நாட்டின் வழியாகத்தான் தமிழகத்தின் பிற பகுதிகளுக்குப் பரவியது. பிரிக்கப்படாத சேலம் மாவட்டம் தமிழகத்தின் எல்லையிலிருந்தமையால் பல மொழி பேசும் மக்கள் கலந்தினிதுறையும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறது. பண்டைய கொங்கு மண்டலத்தில் இருந்த நாடுகளுள் சேல நாடும் ஒன்று. பூவாணி நாடு, ராசிபுர நாடு, ஏழுமூர் நாடு, கொல்லி மலை நாடு, ஆரைக்கல் நாடு, குன்றத்தூர் நாடு, கிழ்க்கரைப் பூந்துறை நாடு போன்ற நாடுகளும் சேலம் மாவட்டப் பகுதியில் இருந்த பண்டைய நாடுகள். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்த வல்வில் ஓரி ஆண்டதும் கொல்லிமலைப் பகுதியாகும். அவன் மழவர் குடியைச் சேர்ந்தவன். மழவர்கள் வாழ்ந்த பகுதியாகையால் சேலம் மாவட்டத்தின் ஒரு பகுதி மழ கொங்கம் என்று பெயர் பெற்றது.

ஆயிரத்திருநூறு ஆண்டுகட்கு முன் வெளியிடப்பட்ட பாண்டியர் செப்பேடுகள் மழ கொங்கு நாட்டைக் குறிப்பிடுகின்றன. அப்போது அதியமான்கள் இப்பகுதியை ஆண்டு வந்தார்கள். அதியமான்கள் உருவாக்கிய கோயில்களே நாமக்கல் குகைக் கோயில்கள். தமிழக அரசியல் வரலாற்றில் மழ கொங்க நாடு முக்கிய பங்கு வகித்தது. மலை வளமும் நீர் வளமும் மிக்க நாடு. வீரத்திலும் நல்ல தீரத்திலும் சிறப்படைந்த மழவர்கள் வாழ்ந்து முடிந்த நாடு. இந்நாடு கிழக்கே பாச்சில் வரை பரவியிருந்தது. திருச்சி மாவட்டத்தில் உள்ள திருமழபாடி பண்டை நாளில் மழவர் ஊராகத் திகழ்ந்தது. தஞ்சாவூரைப் பிடித்துத் தலைநகராகக் கொண்டு ஆண்ட விஜயாலய சோழனின் மகன் ஆதித்த சோழன் கொங்கு நாட்டினைப் பிடித்தான். அவனுடைய கல்வெட்டுக்கள் திருச்செங்கோட்டில் உண்டு. இவனுக்குப் பின் வந்த பராந்தக சோழன் கொங்கு நாட்டிற்குத் தன் பெயரை வைத்து மகிழ்ந்தான். சோழராட்சியில் கொங்கு நாடு வீரசோழ மண்டலம் என்று பெயர் பெற்றது. பராந்தகனுக்கு வீர சோழன் என்ற பெயரும் இருந்தது.

பராந்தக சோழனின் மகனுன கண்டராதித்த சோழனை மணந்தார் கொல்லி மலை மழவரையர் மகளார் செம்பியன் மாதேவியார். கல்வெட்டுக்கள் "மேற்கெழுந்தருளிய தேவர் கண்டராதித்த தேவர் தேவியார், மழப் பெருமானடிகள் மகளார் பராந்தகன் மா தேவடிகளான செம்பியன் மாதேவியார்" என்று கூறும். கண்டராதித்தன் இறந்த பின்பு இவர் சிவநேயத்தில் ஈடுபட்டுத் தேவாரப் பாடல் பெற்ற தலங்களைக் கற்கோயிலாக்கினுர். இவர் கட்டிய கோயில்கள் இன்றும் அவர் பெருமையை நிலைநாட்டி நிற்கின்றன. தன் கணவரின் நினைவாகப் பள்ளிப்படை ஒன்றும் கட்டியுள்ளார். கொல்லி மலையில் உள்ள அறப்பள்ளி ஈசுவரர் கோயிலுக்கு வந்து இறைவனை வணங்கி அக் கோயிலுக்கு நிறைய தானமும் அளித்தார். போக்குவரத்துச் சாதனங்கள் குறைந்த அந்தக் காலத்தில் மலையேறி இறைவனைத் தரிசித்த விதம் அவரது பக்தியினைக் காட்டுகிறது. கலைக் கோயில்களை மட்டும் உருவாக்கவில்லை. உலகக் கலை வல்லுநர்கள் போற்றும் சிற்பங்களை மட்டும் உருவாக்கவில்லை. ஆளுமையிலும், பக்தியிலும், நிர்வாகத் திறமையிலும், கலை ஆர்வத்

திலும் சிறந்து விளங்கிய இராஜராஜ சோழனை உருவாக்கியவரே இந்தச் செம்பியன் மாதேவி. சோழ சாம்ராஜ்யத்தை உருவாக்கிப் பெருமையடைந்த இராஜராஜனை நல்ல நெறியில் வளர்த்தவர் கொல்லி'மழவரையர் மகளார். இவருக்கு நன்றி செலுத்தும் வகையில் இராஜராஜன் தன் மகளுக்கு மாதேவடிகள் என்று பெயர் வைத்தான். வடாற்காடு மாவட்டம் திருமுக்கூடல் என்ற ஊரில் செம்பியன் மாதேவிப் பெருமண்டபம் என்ற மண்டபத்தை இவர் நினைவாகக் கட்டியெழுப்பினன். சேலம் மாவட்டத்தில் உள்ள செம்பியன் மாதேவி என்ற ஊர்ப் பெயரும் இவ்வரசியின் நினைவாக ஏற்பட்டது எனலாம்.

## சேல நாடு

மழ கொங்கு நாட்டினை அடுத்திருந்தது சேல நாடு. சேலம் சுகவனேஸ்வரர் கோயில் கல்வெட்டில் சேல நாடு பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. சேல நாட்டில் உத்தம சோழபுரம், அயோத்தியா பட்டணம், ராசிபுரம் போன்ற ஊர்கள் சிறப்பாகத் திகழ்ந்தன. மறவனேரி என்ற ஊர் ஏழு நூறு ஆண்டுகட்கு முற்பட்ட கல்வெட்டில் கூறப்படுகிறது. பனமரத்துப் பட்டியும் பழங்காலத்து ஊர் தான். கோவை மாவட்டத்துப் பெரிய

களந்தையில் உள்ள கோயில் கல்வெட்டில் சேலநாடு பற்றிய குறிப்பு காணப்படுகிறது. சேல நாட்டுக் கைக்கோளர்கள் அவ்வூரில் உள்ள ஆதித்தேசுரம் கோயிலுக்குத் தூண்களைத் தானமாக வழங்கியுள்ளனர். இது நடந்து தொள்ளாயிரம் வருடங்கள் ஆகின்றன. சில கல்வெட்டுக்களில் சேலம் ராசிபுர நாட்டைச் சேர்ந்ததாகக் கூறப்படுகிறது. சேல நாட்டுப் பகுதியினைப் பண்டை நாளில் கங்கர், சோழர், போசளர், விஜயநகரர், மைசூர் மன்னர்கள், மதுரை நாயக்கர்கள் போன்ற அரச மரபினர் ஆட்சி செய்தனர். ஆனாலும் இப்பகுதி மக்களின் வாழ்க்கை முறை, பண்பாடு, நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவை தொன்று தொட்டு அழியாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மாவட்டத்தின் தூரப் பகுதிகளிலும், மலைப்பகுதிகளிலும் பண்டைய பண்பாடு உயிரோட்டத்துடன் நிலை பெற்றுள்ளதை இன்றும் காணலாம்.

சேலம்

சேலத்திற்கு ஆயிரமாண்டு வரலாறு உண்டு. சோழர் காலக் கல்வெட்டுக்களில் தான் இவ்வூர் முதன்முதலில் சுட்டப்படுகின்றது. தொள்ளாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட கல்வெட்டுக்களில் இவ்வூர் 'சேல

மான 'இராஜாசிரய சதுர்வேதி மங்கலம்' என்று அழைக்கப்படுகிறது. சோழ அரசர்களில் முதலாம் இராஜராஜன் 'இராஜாசிரயன்' என்ற பட்டப்பெயரைத் தாங்கியிருந்தான். இராஜராஜன் ஆட்சிக்கு வந்தபின் இவ்வூரில் ஒரு புதிய குடியிருப்பினை உருவாக்கி அதற்குத் தன் பெயரையே சூட்டினான். சேலம் என்ற பெயர் முதலாம் இராஜராஜன் காலத்திற்கு முன்பே வழங்கப்பட்டிருக்க வேண்டும். சைலங்கள் (மலை) சூழ்ந்திருப்பதால் சைலம் என்று பெயர் பெற்றுச் சேலம் என்று ஆகிவிட்டது. தென்னிந்தியாவிலுள்ள முக்கிய நகரங்களை இணைக்கும் பெருவழியில் சேலம் அமைந்துள்ளது. பண்டை நாளிலிருந்து இவ்வூர் முக்கிய வணிகத் தலமாக இருந்து வருகிறது.

## ஆண்ட அரசர்கள்

ஆயிரம் ஆண்டுகளாகச் சேலத்தை ஆண்ட அரசர்களின் பெயர்களைக் கூறமுடியும். கோப்பரகேசரி, கோவிராசகேசரி போன்ற பட்டப்பெயர்களைத் தாங்கிய சோழ மன்னர்கள் ஆண்டிருக்கிறார்கள். பிற்காலத்துப் பாண்டியர்களில் சடாவர்மன் சுந்தர பாண்டியன், வீரபாண்டியன் போன்ற மன்னர்கள் ஆண்டுள்ளனர். இங்குள்ள சிவன்கோயில் கல்வெட்டு ஒன்று

''அழகிய சொக்கனுரான வீரபாண்டிய தேவர்' என்று கூறுவதைக் காணலாம் போசளர்களில் வீரவல்லாள தேவன் கல்வெட்டு உள்ளது. ராகுத்தராயன் என்பான் கல்வெட்டும் உண்டு. திருமலை நாயக்கருடைய பிரதிநிதியான சலபதிநாயக்கர் ஆட்சி செய்துள்ளார். ஐதர் அலியும் சில காலம் ஆண்டிருக்கிறார்.

## கோயில்கள்

சேலத்தில் இருபதுக்கும் மேற்பட்ட கோயில்கள் இருப்பினும் அவற்றில் வரலாற்றுச் சிறப்புடையன வெகு சிலவே. சுகவனேசுவரர் கோயில், சுந்தரப் பெருமாள் கோயில், கோட்டை மாரியம்மன் கோயில், தலைவெட்டி முனியப்பன் கோயில் போன்றவை வரலாற்றுச் சிறப் புடையன. சில மாரியம்மன் கோயில்கள் மைசூர் மன்னர்கள் காலத்தைச் சேர்ந் தவை. சில வணிக சாதியினர் குலதெய்வக் கோயில்களைக் கட்டி வழிபடுகின்றனர். சுகவன ஈசுவரர் கோயில் ஆயிரம் ஆண்டு களுக்கு முற்பட்ட கல்வெட்டுக்களில் ''கிளி வண்ணமுடையார் கோயில்'' என்று பெயரிட்டு அழைக்கப்பட்டது. பராந்த கன் கல்வெட்டு ஒன்று இருந்ததாகக் கூறுவர். ஆனால் இப்போதுள்ள கோயில் பராந்தகன் காலத்திற்குப் பின்னர் பன்

னிரண்டாம் நூற்றாண்டில் பாண்டியர்களால் புதுப்பித்துக் கட்டப்பட்டது. இக்கோயிலில் சோழர் காலத்து ஜேஷ்டா தேவி உருவம் ஒன்று உள்ளது. அந்தக் காலத்தில் மூதேவியை ஜேஷ்டா தேவி என்பர். இது இன்றும் வழிபாட்டில் இருக்கிறது. சுந்தரப் பெருமாள் கோயில், பதின் மூன்றாம் நூற்றாண்டு கல்வெட்டுக்களில் 'அழகப் பெருமாள் கோயில்' என்று அழைக்கப்படுகிறது. எல்லா உயிர்கட்கும் அன்பு காட்டி வாழ்ந்த புத்த பெருமானின் உருவமே இன்று தலைவெட்டி முனியப்பன் என்று அழைக்கப்படுகிறது. அச்சிலையின் உடைந்த தலையை ஒட்ட வைத்திருப்பதால் தலை வெட்டி முனியப்பர் என்ற பெயர் வந்தது எனலாம். ஆடு, கோழி முதலிய வற்றைப் பலியிட்டு வந்தனர்.

மசூதிகள்

இந்திய நாட்டுச் சமயக் கோயில்களே அன்றி வெளிநாட்டுச் சமயக் கோயில்களும் சேலத்தில் இருந்தன. கோட்டைப் பகுதியில் மிகவும் பழமை வாய்ந்த மசூதி ஒன்று இருந்ததாக ரிச்சர்ட் அவர்கள் கூறியுள்ளார். இதனை 1900-ல் சின்ன மசூதி என்றும், நவாப் மசூதி என்றும் அழைத்துள்ளனர். மணிமுத்தாற்றின் எதிர்க்கரையில் ஜம்மா மசூதி என்ற பெயர்

கொண்ட மசூதி இருந்ததாகக் கூறுவர். இதனைத் திப்பு சுல்தான் கட்டினார். இம் மசூதியில் அவர் பிரார்த்தனையும் செய்துள்ளார். இம்மசூதி பின்னர் ஏற்பட்ட கலவரத்தில் அழிந்து விட்டது. திப்பு காலத்தில் வாழ்ந்த பசல் அலிகான், கில்லதார், மௌளி குலாம் காதர் ஆகியவர்களின் சமாதிகளும் இருந்தன. முகமது புரத்தில் ஒரு மசூதி உண்டு. அதனைக் கட்டியவர் மொகிதீன் ராவுத்தர் என்ற வியாபாரி. நூறு ஆண்டுகட்கு முன் கட்டப்பட்ட கிறித்துவக் கோயில்களும் இங்கு இருந்தன.

## சேலத்தில் சமய வாழ்வு

இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகட்கு முன் தோன்றிய புத்தபிரான் கோட்பாடுகள் தமிழ் நாட்டில் சங்க காலத்திலேயே தலைகாட்டத் தொடங்கின. காலப் போக்கில் தமிழகம் முழுவதும் பரவியது. பின்னாளில் தமிழ் நாட்டின் பிறபகுதிகளில் இம்மதம் செல்வாக்குக் குன்றிய போதும் கொங்கு நாட்டில் ஓரளவு செல்வாக்குடன் நிலைபெற்றிருந்தது. சேலம் மாவட்டத்தில் பௌத்த மதச் சின்னங்கள் வெகு சிலவே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆத்தூர் வட்டத்தில் உள்ள தியாகனூரில் இரண்டு பெரிய புத்தர் சிலைகள் உள்ளன.

அவற்றை ஊர் மக்கள் 'கொங்குச் சித்தர்' என்று அழைக்கின்றனர். சேலம் நகரில் உள்ள தலைவெட்டி முனியப்பர் சிலையும் புத்தர் சிலையே. ரிச்சர்ட் அவர்கள் இதனைச் சமணர் உருவம் என்று தவறாகக் கூறியிருக் கிறார். இந்தப் புத்தர் சிலையே ஆயிரம் ஆண்டுகட்கு முன் சேலத்தில் பௌத்தம் இருந்தது என்பதற்குச் சிறந்த சான்று.

காளாமுகம்

மைசூர் மாநிலத்தில் தோன்றிய காளா முகச் சமயம் தமிழகத்திலும் பரவியது. கொடும்பாளூரை ஆண்ட இருக்கு வேளிர் மரபினர் காளாமுகச் சமயத்தை ஆதரிப் பதில் முன்னின்றனர். சுகவனேசுவரர் கோயில் கல்வெட்டு ஒன்றில் 'மாகேஸ் வரரைப் பூசிக்குமவர்களுக்கு ஒரு மடம் கண்டும்' என்று கூறப்படுகிறது. எழுநூறு ஆண்டுகட்கு முற்பட்ட வீரபாண்டியன் காலத்தில் வாழ்ந்த காளாமுகர்களுக்கு நாடு பூராவிலும் மடங்கள் இருந்தன. அவர்களுக்கு மடம் முக்கிய அமைப்பாகும். தர்மபுரியில் ஆயிரத்திருநூறு ஆண்டுகட்கு முன் ஒரு காளமுகமடம் இருந்தது. மாகேஸ்வரர் வணக்கத்திற்கு முதலிடம் அளித்தவர்கள் காளாமுகர்களே. காளா முகச் சமயாசிரியர்கள் கொங்கு நாட்டில் சில ஊர்களில் தங்கியிருந்தனர்.

சைவம், வைணவம் முதலிய சமயங்கள் சேலத்தில் சிறப்படைந்தமைக்குப் பண்டையக் கோயில்களே சிறந்த சான்றுகள்.

## கோயிலுக்கு அளிக்கப்பட்ட கொடைகள்

பண்டை நாளைய மன்னர்கள் கோயிலைக் கட்டும் போது அதனைப் பாதுகாக்கும் பொருட்டும், பூசை, விழா போன்றவற்றிற்கும் நிவந்தமாகவும் நிலத்தையும் பொற்காசுகளையும் வாரி வழங்கினார்கள். கோயிலைக் கட்டியவர்களே மட்டுமின்றி மற்றவர்களும் நிறைய தானங்களை அளித்தனர். சேலத்துக் கோயில் கல்வெட்டுக்கள் பல வகையான தானங்களைக் குறிப்பிடுகின்றன. நொந்தாவிளக்கெரிக்கவும் திருவிழா எடுக்கவும் நிறைய பொற்காசுகளை அளித்துள்ளனர். கோயில்களுக்குத் தூண்களைத் தானமாக வழங்கினர். ஏழுநூறு ஆண்டுகட்கு முன் ஆண்ட வீரபாண்டியனின் சேனாதிபதி ஒருவன் திருச்சுற்று மதிலைப் புதுப்பித்துப் பெரிதாக்கினான். மாசிமகம் நடத்த ஒருவர் பொன்தானம் அளித்தார்.

## ஊரும் உயர்ந்தோர் பேரும்

பண்டைக்காலத்தில் எல்லா நாட்டவரும் எல்லா நாட்டுக் கோயில்களுக்கும் மன வேறுபாடின்றித் தானம் அளித்துள்ளனர். கொங்கு நாட்டவர் சோழநாட்டுக் கோயில்

களுக்கும், சோழநாட்டவர் கொங்குநாட்டுக் கோயில்களுக்கும், பாண்டி நாட்டார் பிற நாட்டுக் கோயில்களுக்கும் தானம் அளித்தனர். மலைமண்டலத்து மலையாளரில் தாவைக் குறிச்சி சாத்தன் என்பவன் சுக வனேசுவரர் கோயிலில் தூண் வைத்துள்ளான். மலைமண்டலம் என்பது கொல்லி மலையைக் குறிக்கும். இன்னும் கொல்லி மலை வாழ் மக்களை மலையாளர் என்று குறிக்கின்றனர். கொடும்பாளூரில் மணிக்கிராமம் என்ற வணிகக் குழு இருந்தது. இந்தக் குழுவினைச் சேர்ந்த வியாபாரி மஞ்சன் மணிய மாத்தாண்டன் என்பான் பொன் தானம் அளித்துள்ளான். விரசோழ மிலாடு உடையான்றனை நாட்டான் சித்த வடவன் தேவி மலையமா பெருந்தேவியார் கவிரநாதிசங்கரி என்பவள் தானம் அளித்தாள். மிலாடு என்பது இன்றைய திருக் கோயிலூர்ப்பகுதியாகும். இந்நாட்டின் குறுநிலத்தலைவனாயிருந்தான் சித்தவடவன். கொட்டையூர், பழவாறை, மணிமங்கலம் கஞ்சமலை போன்ற ஊர்கள் கல்வெட்டுக் களில் பயின்று வரக்காணலாம். தென்ன வதரையன் ஆயிரவன் தேவியார் மூரி அமுதனூர், வெள்ளாள வள்ளி மருதமுடையான் நிலையிட்டான் சொக்கி, அண்ணமலைத்தட்டான் சூரியனை நூற்றெண்மத்தாண்

டான், சந்திரன்கோன், காஸ்யபன் நம் பிள்ளை எடுத்த கையழகியனுன சுந்தர பாண்டிய பிரமராயன், சாத்தன் மானேந்திய கையன் குளத்துடையான் பூமன்நம்பி, சாத்தன் திரையன், பெரியபிள்ளை, ஆழ்வார் மகன் சிறுப்பெருமாள், முரமாயி லெட்டி, மூரிகுயவன், பதுவன் சந்திரன், நட்டம் சோமி, சாத்தப் பகையன், கண்ணு கனுன வழுதிநாராயணதேவன் முதலிய பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. பெரும்பாலான பெயர்கள் தெய்வத்தின் பெயராக இருப்பது குறிப்பிடத்தக்கது. சாத்தன் என்ற பெயர் மிகுந்து காணப்படுகிறது. பெண்கள் தானம் வழங்குவதில் முக்கிய பங்காற்றியுள்ளனர். சோழர் காலத்திலிருந்து விஜய்நகரர் காலம் வரையிலான கல்வெட்டுக்களில் மேலே கூறப்பட்ட ஊரும் பேரும் பயின்று வரக்காணலாம்.

### நாடாண்ட நாயக்கர்கள்

விஜயநகர சாம்ராஜ்யம் ஒடுங்கு தசை அடைந்தபோது சேலம் பாளையக்காரர்களின் தலைநகராயிற்று. நாயக்கர் காலத்துச் சேலம் எப்படி இருந்தது என்பதை மதுரைக் கிருத்துவசபைக் குறிப்புக்களிலிருந்து அறியமுடிகிறது. 1624-ல் ராபர்ட் டி நொபிலி சேலம் வந்தார். அப்போது சலபதி நாயக்கர் என்ற மன்னன்

ஆண்டு வந்தார். இவர், சேந்த மங்கலம் அரசரான இராமசந்திர நாயக்கரை விடப் பேர் பெற்றவர். பின்னால் கூறப்பட்டவனின் அண்ணன் திருமங்கல நாயக்கர் இருத்துவ சமயத்தில் ஈடுபாடு கொண்டார். ராம சந்திர நாயக்கர் மகப்பேறு இல்லாமல் இருந்தார். திருமங்கல நாயக்கருடைய முதல் மகன் சேந்த மங்கலம் ஆட்சியைப் பிடிக்க முயற்சி செய்தான். அரசுரிமைக்கு நடைபெற்ற போரில் திருமங்கல நாயக்கரும், சேலத்து நாயக்கரும் தோற்றனர். திருமங்கல நாயக்கர் மோரமங்கலம் அரசரிடம் அடைக்கலம் புகுந்தார். சென்னப்ப நாயக்கர் என்ற நாயக்க மன்னரும் சேலத்திலிருந்து ஆட்சி செய்துள்ளார். இவரே தர்மபுரி மாவட்டத்தில் உள்ள தென்கரைக் கோட்டையைக் கட்டியவர். சென்ன சமுத்திரம் என்ற ஊரைத் தானமாகக் கொடுத்துள்ளார். இவருக்குப்பின் சீல நாயக்கன் என்பவரும் சேலத்தைச் சில காலம் ஆண்டுள்ளார். இவர் பேரில் சீல நாயக்கன் பட்டி என்ற ஊர் ஏற்பட்டது.

ஐதர் அலி-திப்பு

ஆங்கிலேயர்களுக்கும் ஐதர் அலிக்கும் நடந்த போராட்டத்தில் கொங்கு நாடு மையப் பொருளாக இருந்தது. அடிக்கடி இருவர் கைக்கும் மாறி மாறி வந்தது.

மக்கள் அமைதியின்றி வாழ்ந்தனர். 1768-ம் ஆண்டு கர்னல் வுட் என்பான் ஐதரலியிடமிருந்து சேலத்தைக் கைப்பற்றினன். சில மாதங்களில் ஐதர் படையெடுத்துக் கோட்டையை முற்றுகையிட்டார். அப்போது முகமது அலி, கேப்டன் ஹெயின் என்ற இரு படைத் தலைவர்கள் தலைமையில் ஆங்கிலப் படை கோட்டையைப் பாதுகாத்து வந்தது. போர் தொடங்கியது. ஒரு நாள் மாலை ஐதர் அலியிடமிருந்து ஒரு ஐரோப்பிய சிப்பாய் ஒரு செய்தியைக் கொண்டு வந்தான். கோட்டையை ஐதரிடம் ஒப்படைத்தால் ஆங்கிலப்படை பத்திரமாகத் திருச்சிக்குச் செல்ல அனுமதிப்பதாகக் கூறியிருந்தார். ஆனல் ஆங்கிலேயர் இதனை ஒப்புக்கொள்ளவில்லை. திரும்பவும் பீரங்கியும், துப்பாக்கியும் முழங்கின. படைபலம் குறைவாய் இருப்பதறிந்த ஆங்கிலத் தலைவன் சமரசத்திற்கு வேண்டுகோள் விடுத்தான். ஐதர் சமரசம் செய்ய ஒப்புக் கொள்வது போல் பாசாங்கு செய்து வெளியில் வந்த ஆங்கிலேயர்கள் அனைவரையும் சிறைப்பிடித்தார். திப்புவின் வீழ்ச்சிக்குப்பின் ஆங்கிலேயர் சேலத்தைப் பிடித்தனர். ரீட் என்பவன் காலத்தில் சேலம் முக்கிய நகரமாயிற்று. ஆனல் 1860 வரை சேலம், மாவட்டத்தின் தலைநகரமாகவில்லை.

சேலம் நகரில் ஆங்கிலேய கலெக்டர்கள், ராணுவ அதிகாரிகள் போன்றவர்களின் சமாதிகள் உள்ளன. சார்லஸ் கார் பெண்டர், ஜோசியா மார்ஷல் ஹித் போன்றவர்கள் சமாதி இங்கு உண்டு. மாவட்ட ஆட்சித்தலைவர் அர்க்ரவ், சி.என். போசின், எலியட் மோல், ஆமில்டன் போன்றோர் சமாதிகளும் இங்கு இருக்கக் காணலாம். மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தின் வடபுறத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆங்கிலேயர் சமாதிகளை இன்றும் காணலாம்.

### சேலத்துக் கன்னிமார்

தலைவெட்டி முனியப்பர் கோயிலருகில் தீபாஞ்ச அம்மன் கோயில் உள்ளது. இங்கு ஒரு பலகைக் கல்லில் இரண்டு பெண்களின் உருவம் வடிக்கப்பட்டுள்ளன. இதுபற்றி ஒரு கதை வழங்குகிறது. ஒப்பணக்காரச் சாதியைச் சேர்ந்தவர்கள் இந்தப் பெண்கள். ஒருத்தி பெயர் திருமலை அம்மாள். மற்றொருத்தி பெயர் வெங்கட் டம்மாள். இவர்களின் கணவன் போரில் கொல்லப்பட்ட செய்தியை அறிந்தவுடன் தீ மூட்டி அதில் பாய்ந்து மாண்டு தம் புகழ் நிறுத்தினர். இவர்களைப் போற்றும் வகையில் சிலை வைத்துக் கோயில் கட்டி

வணங்கி வருகின்றனர் மக்கள். இது போன்ற தீபாஞ்சம்மன் உருவங்கள் ஹஸ்தம்பட்டி செல்லும் சாலையிலும், ஓமலூர் செல்லும் சாலையிலும் உள்ளன. தீ பாய்ந்த பெண்களுக்காக நடப்பட்ட கற்களைச் சதிக்கல் என்றும், மாசதிக்கல் என்றும் கூறுவர். தன் கணவன்மாரோடு தம்மையும் மாய்த்துக் கொள்ளும் வழக்கம் தமிழ்நாட்டில் இரண்டாயிரம் வருடங்களாக இருந்து வந்தது. கொங்கு நாட்டுக் கோயில் கல்வெட்டுக்களில் தீபாஞ்சகாணி என்றொரு நில வகை குறிக்கப்படுகிறது. இந்நிலம் பெரும்பாலும் தீ பாய்ந்த பெண்களின் கோயில்களுக்கு விடப்பட்ட நிலம் ஆகலாம்.

செப்பேடுகள்

ஆயிரத்திருநூறு ஆண்டுகட்கு முன் வெளியிடப்பட்ட செப்பேடு ஒன்று சேலத்தில் கிடைத்துள்ளது. இதனை வெளியிட்டவன் கங்கமன்னன் ஸ்ரீபுருஷன் என்பவன் ஆவான். இவனுடைய மகன் துக்கமார எரியப்பன் என்பவன் வேண்டிக் கொண்டதற்கிணங்க குமாரமங்கலம் என்ற ஊரைத் தானமாகக் கொடுத்தான். இந்தச் செப்பேட்டினால் சேலம் மாவட்டத்தின் மேற்குப் பகுதி கங்கர்களின் ஆட்சியிலிருந்தது என்றறியலாம்.

### பஞ்சந்தாங்கி ஏரி

சேலம் சுகவனேசுவரர் கோயில் கல்வெட்டுக்களிலும் சுந்தரப் பெருமாள் கோயில் கல்வெட்டுக்களிலும் பஞ்சந்தாங்கி ஏரி' என்றொரு ஏரி குறிப்பிடப்படுகின்றது. இவ்வேரி மறவனேரி அருகில் இருந்திருக்கவேண்டும். கொங்கு நாட்டில் பஞ்சம் ஏற்படுவது வாடிக்கையான ஒன்று. பஞ்சம் காரணமாகக் குடும்பங்கள் வேறிடங்களுக்குக் குடி பெயர்ந்து சென்று விடுதல் உண்டு. இத்தகைய பஞ்சக் காலங்களிலும் இந்த ஏரி வற்றாத நீரைப் பெற்றிருந்திருத்தல் வேண்டும். அதனால் பஞ்சந்தாங்கி ஏரி என்று பெயர் வந்திருக்கலாம். எழுநூறு வருடங்களுக்கு முன் வெட்டப்பட்ட ஏரி இது.

### சேல நாட்டுப் பண்டைய ஊர்கள்

உத்தமசோழபுரம்:- இவ்வூரின் பெயர் சோழ அரசர்களில் உத்தமசோழன் என்பவனின் நினைவாக ஏற்பட்டது. இவன் செம்பியன் மாதேவியின் மகன். உத்தமச் சோழனைத் திருவயிறு வாய்த்த பிராட்டியார் என்று சோழநாட்டுக் கல்வெட்டுக் கூறும். இவன் இராஜராஜசோழனுக்கு முன் ஆண்டவன். உத்தமசேழபுரத்தினை அங்குள்ள கல்வெட்டுக்கள்; உத்தமசோழபுரமான மேற்றலைக் காவிரிப்பூம்பட்டனம்

என்று கூறும். இங்கு வியாபாரிகள் வாழ்ந்துள்ளனர். இங்குள்ள சிவன் கோயிலில் நான்கு கல்வெட்டுக்கள் உள்ளன.

**அயோத்தியா பட்டணம்**

இராமாயணத்தில் குறிப்பிடப்படும் அயோத்தியை நினைவுபடுத்தும் வகையில் இப்பெயர் அமைந்தது. இங்கு நாயக்கர் காலக் கோயில் ஒன்று உண்டு. முந்நூறு ஆண்டுகட்கு முன் கட்டப்பட்ட இக்கோயிலைக் கோதண்டராமசாமி கோயில் என்று கூறுவர். மகாமண்டபத்தில் உள்ள குதிரைத் தூண்கள் விஜயநகரர் பாணியில் அமைந்தவை. கோயிலைக் கட்டிய அரசனும் அரசியும் கும்பிட்டு நிற்கும் காட்சியில் வடிக்கப்பட்டுள்ளனர்.

**இராசிபுரம்**

பண்டைய நாளில் இவ்வூர் இராசிபுர நாட்டின் தலைநகராய் இருந்தது பண்டையக் கல்வெட்டுக்களிலும் ராசிபுரம் என்றே குறிக்கப்படுகிறது. காளாமுக சமய ஆச்சாரியர்களின் பெயர்கள் ராசி என்ற அடைப் பெயருடன் முடியும். அந்த அடைச் சொல்லின் அடியாக ராசிபுரம் என்ற பெயர் வந்திருக்கலாம். இங்குள்ள கைலாசநாதர் கோயில் எழுநூறு ஆண்டுகட்கு முன் கட்டப்பட்டது பாண்டியத் தொண்டைமான் என்பானின் கல்வெட்டு இங்கு உண்டு.



வாமனனுக்கு மாபலி தாரை வார்க்கும் காட்சி,
அதியர் சிற்பம், நாமக்கல், சேலம் மாவட்டம்,
கி. பி. எட்டாம் நூற்றாண்டு.

திரு. மா. சந்திரமூர்த்தி. எம்.ஏ.



நரசிம்மர் வடிவில் விஷ்ணு இரணியனை
அழிக்கும் காட்சி, குடைவரைச் சிற்பம், நாமக்கல்,
சேலம் மாவட்டம், அதியர் காலம்,
கி. பி. எட்டாம் நூற்றாண்டு.